## 30 வருடகால நிறைவினை நினைவுகூறும் முகமாக நடாத்தப்படும் "மனித நேயத்தை நிலைநிறுத்தல்" தொடர்பான புகைப்படக் கண்காட்சி

மனித உரிமைகள் தொடர்பான கல்வியை வழங்குதல் மற்றும் ஆய்வு செய்தல் போன்றவற்றில் 30 வருடகால நிறைவினை நினைவுகூறும் விதமாக கொழும்புப் பல்கலைக்கழக மனித உரிமைகள் கற்கைகள் நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள புகைப்பட போட்டியில் பங்குபற்றுமாறு அழைப்பு வடுக்கின்றோம்.

உங்களுடைய உணர்வினையும் திறமையையும் வெளிப்படுத்தும் வகையில் அமையக்கூடிய காத்திரமான படைப்புக்களைச் சமர்ப்பிக்குமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம். போட்டியில் பங்குபற்றுவதற்கு பின்வரும் வழிகாட்டுதல்களையும் விதிமுறைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

**அனைத்து வயதுப் பிரிவினரும் தமது படைப்புக்களைச் சமர்ப்பிக்கலாம்**

**இறுதித் திகதி: 20 நவம்பர் 2021**

**<u>பரிசு தொகை</u>**

முதலாவது பரிசு : Rs. 10,000/=
இரண்டாவது பரிசு: Rs. 7,500/=
மூன்றாவது பரிசு : Rs. 5,000/=

அ) வெற்றி பெறும் புகைப்படங்கள் ஆண்டு நிறைவு விழா வெளியீடுகளில் பிரசுரிக்கப்படும்
- முதலாவது மற்றும் இரண்டாவது இடத்தைப் பெற்ற புகைப்படங்கள் - வருடாந்த நினைவு மடலிலும்
- மூன்றாவது இடத்தைப் பெற்ற புகைப்படம் - செய்திமடலிலும் பிரசுரிக்கப்படும்

ஆ) பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் "பங்குபற்றியமைக்கான சான்றிதழ்கள்" வழங்கப்படும்

இ) அனைத்துப் புகைப்படங்களும் மெய்நிகர் வழியே நடாத்தப்படும் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும்.

## போட்டிக்கான விதிமுறைகள்

(ஹ) அனைத்துப் புகைப்படங்களும் நடுவர்கள் குழாமினால் நன்கு பரிசீலிக்கப்பட்டு வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் மேலும் நடுவர்களின் முடிவே இறுதி முடிவாகும் என்பதோடு போட்டி தொடர்பான அனைத்து விடயங்களிலும் பங்கேற்பாளர்கள் அனைவரும் இக்குழாமினால் வழிநடத்தப்படுவர்.

(ஜ) போட்டி தொடர்பான முடிவுகள் மற்றும் வெற்றியாளர்கள் தொடர்பான தகவல் இணையத்தளத்தின் ஊடாக அறிவிக்கப்படும்

(ஞ) உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காக அசல் JPEG அல்லது மூலக் கோப்புகளை CSHR இற்கு சமர்ப்பிக்கவும். குறிப்பிட்ட விதிமுறைகளின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்படாத புகைப்படங்கள் போட்டியிலிருந்து நீக்கப்படும்.

(ஞை) பின்வரும் காரணங்களுக்காக போட்டியில் கலந்துகொள்ளும் பங்கேற்பாளர்கள் தயவுசெய்து உங்களுடைய சமர்ப்பிப்புகளின் மூலப் பிரதிகளை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்:

(அ) பரிசில்கள் வழங்கப்படுவதற்கு முன் அவற்றின் நம்பகத்தன்மையை சரிபார்ப்பதற்கு;

(ஆ) எதிர்காலத்தில் நடாத்தப்படும் பௌதிக ரீதியான கண்காட்சியில் காட்சிப்படுத்துவதற்கு;

(இ) கொழும்புப் பல்கலைக்கழக மனித உரிமைகள் கற்கைகள் நிலையத்தின் மேம்பாட்டு நடவடிக்கைகளில் பகிர்ந்து கொள்ளவும் மற்றும்/அல்லது பயன்படுத்துவதற்காகவும்;

(ஈ) இந்த "வழிகாட்டுதல்கள் மற்றும் விதிமுறைகள்" அல்லது எந்தவொரு விடயத்திலும் தெளிவின்மை ஏற்பட்டால், போட்டித் தேர்வுக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகவும் முடிவானதாகவும் இருக்கும்.

(உ) ஒரு பங்குபற்றுனர் பல புகைப்படங்களைச் சமர்ப்பிக்கலாம் ஆனால், குறித்த நபரின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட புகைப்படங்கள் விருதுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால், அக்குறித்த போட்டியில் ஓர் உயர்ந்த விருதினை மட்டுமே அவர் பெற்றுக்கொள்வார். இருப்பினும், உங்களால் **குறிப்பிட்ட நேரத்தில்**

**ஒரு புகைப்படத்தினை** மட்டுமே மின்னஞ்சல் அனுப்பவோ/சமர்ப்பிக்கவோ முடியும்.

**<u>வழிகாட்டல்கள்</u>**

(அ) சமர்ப்பிக்கப்படும் புகைப்படங்கள் குறைந்தது 640 பிக்சல்கள் (pixels) அகலமும் 1920 பிக்சல்கள் நீளமும் கொண்டதாக இருத்தல் வேண்டும். படங்கள் 5MB ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது மேலும், புகைப்படங்கள் JPEG அல்லது PNG வடிவத்தில் இருக்க வேண்டும்.

(ஆ) இதற்கு முன்னர் ஏதாவது போட்டியில் விருதுகளைப் பெற்றுக்கொண்ட புகைப்படங்கள் இருப்பின், சம்பந்தப்பட்ட போட்டி விதிமுறைகளில் குறிப்பிட்ட கட்டுப்பாடுகள் ஏதும் விதிக்கப்பட்டிருக்காத பட்சத்தில் அத்தகைய புகைப்படங்களை மீண்டும் இப்போட்டிக்கு சமர்ப்பிக்கலாம் எனினும், அது குறித்து உறுதிப்படுத்தல் படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

(இ) கடந்த 5 வருடங்களுக்குள் எடுக்கப்பட்ட புகைப்படங்களை போட்டிக்கு சமர்ப்பிக்கலாம்.

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து புகைப்படங்களும் அசல் தரவுத் தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும். இருப்பினும் படத்தில் ஓரம்(ங்கள்) [borders], சின்னம்(கள்), பதிப்புரிமைக் குறியீடுகள், அடையாளம் காணும் குறியீடுகள் அல்லது வேறு ஏதாவது குறிப்புகள் மற்றும்/அல்லது குறியீடுகள் இருக்கக்கூடாது.

(உ) வண்ண மேம்பாடு, வடிக்கட்டிகளின் (filter) பயன்பாடு மற்றும் புகைப்படத்தை(ங்களை) திருத்தியமைத்தல் (editing) உள்ளிட்ட அடிப்படை திருத்தல் செயற்பாடுகள் புகைப்படத்தின் நம்பகத்தன்மையையும்/அல்லது உண்மைத்தன்மையையும் பாதிக்காத பட்சத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

(ஊ) திரிபுபடுத்தல், மோசடி மற்றும்/அல்லது சூழ்ச்சி போன்றவற்றினை கையாளுதல் மற்றும்/அல்லது சட்டகத்திற்குள் குறிப்பிடத்தக்க கூறுகளை சேர்த்தல் மற்றும் அகற்றுதல் போன்ற மேம்பட்ட திருத்தல் செயற்பாடுகளை பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.

(எ) சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு புகைப்படமும் போட்டிக்கான வலைத்தளத்தில் காட்சிப்படுத்தப்படுவதற்கு முன் தேர்வு செயன்முறை ஒன்றுக்கு உட்படுத்தப்படும். சமர்ப்பிக்கப்பட்ட புகைப்படங்களை மதிப்பீடு செய்து நிராகரிப்பதற்கான முழு உரிமை CSHR இற்கு உள்ளது.

(ஏ) ஏரிச்சலூட்டும் நிர்வாணம் மற்றும் வன்முறை சார்ந்த படங்கள் மற்றும்/அல்லது சட்டம், மதம், ஒழுக்க மரபுகளுக்கு முரணானதாக கருதப்படுகின்ற எந்தவொரு உள்ளடக்கத்தையும் கொண்ட படங்கள் மேலும், எந்தவொரு நபரின் உருவத்தையும் இழிவுபடுத்தும் வகையில் அமைந்த புகைப்படங்கள் உள்ளடங்களாக பொருத்தமற்ற மற்றும்/அல்லது புண்படுத்தும் வகையில் சித்தரிக்கப்படுகின்ற புகைப்படங்கள் கண்டிப்பாக தடைசெய்யப்பட்டு நிராகரிக்கப்படும்.

## <u>சமர்ப்பித்தல் செயன்முறை</u>

(அ) நிகழ்நிலை (online) வழியாக மட்டுமே போட்டிக்கான புகைப்படங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ஆ) புகைப்படங்கள் secretary@cshr.cmb.ac.lk என்ற செயலாளரின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

(இ) மின்னஞ்சல் பின்வரும் தகவல்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

(i) "30 வது ஆண்டு நிறைவு விழா – புகைப்படக் கண்காட்சி" என மின்னஞ்சல் தலைப்பிடப்பட்டிருக்க (subject) வேண்டும்;

(ii) வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கு ஏற்ப புகைப்படங்கள் இருக்க வேண்டும்;

(iii) புகைப்படங்கள் எடுக்கப்பட்ட இடம் மற்றும் திகதி;

(iv) முழுப்பெயர்;

(v) பங்குபற்றுபவரின் தேசிய அடையாள அட்டை இலக்கம்;

(vi) தொடர்பு இலக்கம் (நிலையான மற்றும் **கைத்தொலைபேசி**)

(vii) முறையாக பூர்த்திசெய்யப்பட்டு கையொப்பமிடப்பட்ட உறுதிபடுத்தல் படிவம்

(viii) சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதியின் பின்னர் அனுப்பி வைக்கப்படும் புகைப்படங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.